www.tamilarangam.net

# மக்கள் தலைவர்களா? மதத்தின் தலைவர்களா?

“நான் ஓர் இந்து. அதனால் இவ்விடயத்தில் கருத்துத் தெரிவிப்பது எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆனால் இந்தச் சம்பவம் எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. மத உடையில் ஒரு கத்தோலிக்கப் பாதிரி பயங்கரவாதிகளுடன் (தீவிரவாதிகள்) தொடர்பு வைத்திருந்தால் அதன்மூலம் அவர் தமது சமயத்திற்குப் பங்கம் விளைவித்தவராகின்றார்.”

தமிழீழத்தில் சிறிலங்கா கூலிப்பட்டாளத்தினால் தமிழ் கத்தோலிக்கப் பாதிரிமார் தளை செய்யப்பட்டு, உடற்சிதைவு செய்யப்பட்டபொழுது தினபதி (18-11-82) ஏட்டின் செய்தியாளருக்கு எதிர்க்கட்சித் தலைவர் **அமிர்தலிங்கம்** அவர்கள் அளித்த பேட்டி இது.



தமிழீழம் கிடைக்க ஆண்டவன் சன்னதியில் அருச்சனை செய்து காளாஞ்சி பெறும் எதிர்க்கட்சி முதல்வரும் த. வி. கூ. தலைவர்களும்.

இப்பேட்டியை த. வி. கூட்டணியின் பொறுப்பு வாய்ந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொடுக்கலாமா?

அப்படியாயின்,

- தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பெற்றுத் தருவதாகக் கூறும் ‘தமிழீழம்’ இந்துமத ஆதிக்கம் கொண்டதா?
- கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தினரின் நிலையென்ன?

கிறிஸ்தவ, இஸ்லாமியத் தமிழர்களுக்கே இந்நிலையெனின். இந்திய வமிசா வழியினர் எனக் கூறப்படும் மலையகம் வாழ் தமிழ் மக்களின் நிலை என்ன?

“நான் ஓர் இந்து” என எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் முத்திரை குத்திக் கொள்வாரேயானால் “ஒரு பாதிரி தீவிரவாதிகளுடன் தொடர்பு கொள்வதன் மூலம் கிறிஸ்தவ சமயத்திற்கு பங்கம் விளைவிக்கிறார்” எனக் கூறி எப்படி இன்னொரு மதத்தின் உள்விவகாரங்களில் தலையிட முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்கா பட்டாளத்திற்கு துணை போய்க்கொண்டு — தமிழீழ மக்களுக்கும் பாதுகாப்பா ?

- வேட்டைக்குச் சென்ற இரு தமிழ் இளைஞர்கள்
- **நடேசலிங்கம்** **உயிர்ப்பலி !**
- **கனகலிங்கம்**

வவுனியாக் காட்டில் சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு.
செய்தி :— சுதந்திரன் ; 2. 12- 1981



வவுனியா— பெரிய தம்பனையில் அப்பாவித் தமிழ் இளைஞர்களைச் சுட்டுப் போசுக்கிய சிறிலங்கா கவச வண்டிப்படையின் ஒரு பகுதி.

- ''சுதந்திரம் மறுக்கப்படும் போது பயங்கர வாதம் தோன்றுகிறது''

  *எஸ். டி. பண்டாரநாயக்கா*
  கம்பகா — எம்.பி.

  தமிழ் இளைஞர்கள் சுடப்பட்டபொழுது சிறிலங்கா சிங்கள எதிர்க்கட்சி உறுப்பினர் விடுத்த அறிக்கை.
  சுதந்திரன் 2-12-81

- தமிழீழப் பயங்கரவாதிகள்தான் சுட்டுக் கொல்லப் பட்டனர். மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை. கடந்த சில கிழமைகளில் ஏராளமான பயங்கவாதிகள் போலீசாராலும், இராணுவச் சிப்பாய்களினாலும் சுற்றி வளைக்கப்பட்டுப் பிடிபட்டுள்ளனர்.

  வவுனியாப் பகுதியில் பல கைதுகள் இடம்பெற்றன. இப்பகுதி காடுகள் நிறைந்ததால் இப்பகுதியில் பயங்கரவாதிகள் வாழ ஏற்ற இடமாக தெரிந்து உள்ளனர்.

  **செய்தித்தாள்களுக்கு சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அறிக்கை.** (DAILY NEWS 19-12-8
  சுதந்திரன் 12-1-81

- பாராளுமன்றத்தை தமிழீழ விடுதலைக்குப் பிரச்சார மேடையாக பயன்படுத்துவோம் என 1977-ல் தேர்தல் மேடைகளில் முழக்கம் இட்டவர்கள் தேர்தலின் பின் சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறையை மூடி மறைப்பதேனோ ?

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
## மாணவர் அணி

19—2—1983

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்